23.10.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண். 20/2019</u>

அ.சா.16

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பொன்.கண்ணதாசன் | | |
| த/பெ | பொன்னுசாமி | | |
| கிராமம் | வீரகவுண்டனூர் | தொழில் | |
| தாலுக்கா | பெத்தநாயுக்கன் பாளையம் | வயது | 36/2024 |
| மாவட்டம் | சேலம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது சின்னசேலம் தாலுக்கா, கூகையூர் கிராம நிர்வாக அலுவலராக பணி செய்து வருகிறேன். கடந்த 27.06.2018ந் தேதி விழுப்புரம் மாவட்டம் சித்தலிங்கமடம் கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்தபோது டி.எடைப்பாளையம் கிராமத்தை சேர்ந்த அப்தூல்ஜபார் என்பவர் கொலை வழக்கு சம்மந்தமாக அவர் அவருடைய கொல்லை வீட்டில் இறந்து கிடப்பதாக கிராம உதவியாளர் திரு. தனபால் மூலம் எனக்கு தகவல் கிடைத்தது. தகவல் கிடைத்ததற்கு பின்பு நான் கிராம உதவியாளரை கூப்பிட்டு கொண்டு சம்பவ இடம் சென்றேன். அந்த சம்பவ இடத்திற்கு காவல் துறையினர் இரவு8.45 மணிக்கு வந்தனர். அங்கு ஆய்வாளர் பார்வை மகசர் தயார் செய்ய வேண்டும் என்றும், அதில் நாங்கள் சாட்சியாக இருக்க வேண்டும் என்றும், கேட்டுக்கொண்டார். நாங்கள் சாட்சியாக இருக்க ஒப்புக்கொண்டோம். அதன் பிறகு ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். அதில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையது ஆகும். அந்த பார்வை மகசர் அ.சா-ஆ10 ஆகும். அதன் பிறகு போலீசார் இரத்த கறை படிந்த சிமெண்ட் காரை மற்றும் சாதாரண காரை ஆகியவற்றை எங்கள் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். அந்த கைப்பற்றுதல் மகசரில்

நானும், என்னுடைய கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தபோது சுமார் இரவு 10 மணி இருக்கும். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையது ஆகும். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.11 ஆகும். அதன் பிறகு 30ந் தேதி காலை 8 மணிக்கு மீண்டும் எங்களை சம்பவ இடத்திற்கு அருகில் இருந்த கரும்பு தோட்டத்திற்கு வரவழைத்து வீட்டின் அருகே இருந்த வி.கே.சி.பிரைடு 10 இன்ச் கொண்ட ஒரு ஜோடி செருப்பை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். அதில் நானும், உதவியாளரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையது தான். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ12 ஆகும். என்னால் அந்த இரத்த கறை படிந்த மண், செருப்புகள் ஆகியவற்றை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். சாட்சி அவைகளை சரியாக அடையாளம் காட்டினார். இரத்த கறை படிந்த சிமெண்ட் காரை சா.பொ.8 ஆகும். இரத்த கறை படியாத சிமெண்ட் காரை சா.பொ.9 ஆகும். வி.கே.சி. பிரைடு செருப்பு 1 ஜோடி சா.பொ.10 ஆகும். இது சம்மந்ததாக என்னை போலீசார் விசாரணை செய்தார்கள். நான் இந்த வழக்கில் வேறு எதிலும் கையெழுத்து போடவில்லை.

**<u>2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

சம்பவ சமயத்தில் நான் எடைப்பாளையம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணி புரிந்து வந்தேன். நான் திருக்கோவிலூரில் குடும்பம் இருந்தேன். என்னை கிராம உதவியாளர் போன் மூலம் கூப்பிட்டார். என்னை காவல் துறையினர் விசாரித்த போது நான் எந்த எண்ணில் இருந்து கூப்பிட்டார் என்று சொல்லவில்லை. கிராம நிர்வாக அலுவலருக்கு என்று சில வழிகாட்டி நெறிமுறைகள் உள்ளது என்றால் சரிதான். நான் மேல் அதிகாரிக்கு தகவல் கொடுத்தேனா என்றால் நான் வட்டாட்சியருக்கு தகவல் கொடுத்து தான் அங்கு சென்றேன். அது பற்றி எந்த ஆவணமும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனக்கு 24 மணி நேரமும் பணி நேரம் தான். எனவே நான் எங்கே எங்களது கிராம நிர்வாக அலுவலகம் உள்ளதோ அங்கு தான் குடியிருக்க வேண்டும் என்றால் சரிதான். நான் எடைப்பாளையம் கிராமத்தில் வசிக்கவில்லை என்றால் சரிதான். என்னை விசாரிக்கும் போது இரவு 8.45 மணி இருக்கும். அங்கு தெரு விளக்கு வெளிச்சம் இருந்ததா என்றால் வெளிச்சம் இருந்தது அது என்ன வெளிச்சம் என்று எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவ இடத்தை சுற்றி தனிப்பட்ட நபர்களுக்கு

நிலம் இருந்தது என்றால் சரிதான். பக்கத்து நிலத்துக்காரர்கள் பெயர்கள் எனக்கு தெரியாது. போலீஸ்காரர் அவர்கள் யாரையும் கூப்பிட்டு விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து தான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து போட்டேன் என்றால் இல்லை.

<u>**5ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**</u>

நான் பணி புரியும் கிராமத்தில் எந்த குற்ற சம்பவமும் நடந்து இருந்தால் அது குறித்து தகவல் சேகரித்து காவல் துறைக்கு புகார் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்பவம் மதியம் 1.30 மணிக்கு நடந்தது. நான் இந்த வழக்கில் காவல் துறைக்கு தகவல் சொன்னேன். எழுத்துமூலமாக சொல்லவில்லை. போன் மூலமாக தகவல் சொன்னேன். அன்றைய தினம் நான் திருக்கோவிலூர் தாலுக்கா அலுவலகத்திற்கு சென்று இருந்தேன். நான் அரசு பணி நிமித்தமாக அங்கு சென்று இருந்தேன். தாலுக்கா அலுவலகத்திலிருந்து என் அலுவலகத்திற்கு வந்து அதன் பிறகு தான் சம்பவ இடம் சென்றேன். நான் அப்போது போன் பேச வில்லை. உறுதிப்படுத்திக்கொண்டு தான் போன் பேசினேன். நான் சம்பவ இடத்திலிருந்து போன் பேசினேன். சம்பவ இடத்திற்கு காவல் துறையினர் என்னை போக சொல்லவில்லை நானாக தான் சென்றேன். நான் 8.30 மணிக்கு அங்கு சென்று பார்த்தேன். எனக்கு 7 மணிக்கு தான் தகவல் கிடைத்தது. எங்களது அலுவலகத்தில் மூமண்ட் ரிஜிஸ்டர் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் வெளியில் சென்றால் கரும்பலகையில் எழுத வேண்டும் என்றால் சரிதான். ஆனால் நான் அவ்வாறு எழுதவில்லை. போலீசார் நான் போன பிறகு இரவு 8.45 மணிக்கு தான் வந்தார்கள். போலீசார் வந்ததும் என்னை விசாரித்தார்களா என்றால் நான் வருவதற்கு முன்பு போன் செய்தேன். என்னை போலீசார் விசாரிக்கவில்லை. சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டார்கள். நான் சென்று பார்த்த போது உடல் அங்கு இருந்தது. பார்வை மகசரில் அது பற்றி குறிப்பிடபடவில்லை. நான் போகும் போது உடல் கட்டிலுக்கு கீழே இருந்தது. நான் பார்க்கும்போது அங்கு கட்டில் இருந்தது. அந்த கட்டிலை வரைபடத்தில் போட்டார்கள். எனக்கு வரைபடத்தை தயார் செய்த போது தெரியும். தலை தென்கிழக்காக இருந்ததாக நான் சொல்கிறேன். உடலை அங்கிருந்து எப்போது எடுத்துக்சென்றார்கள் என்றால் இந்த மகசர் தயார் செய்ததும் எடுத்து சென்றார்கள். அன்றைய தினம் என்னிடம் எத்தனை ஆவணங்களில் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் இரண்டு கையெழுத்து வாங்கினார்கள். 30ந் தேதி

ஆய்வாளர் மீண்டும் எனக்கு போன் செய்து சம்பவ இடத்திற்கு வாங்க என்று சொன்னார். என்னிடம் மகசர் தயார் செய்ய வேண்டும் சம்பவ இடத்திற்கு வாங்கள் என்று சொன்னார்கள். எதற்காக என்னை கூப்பிட்டார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அன்றும் நான் அயல் பணிக்கு சென்றதாக பதிவேட்டில் எழுதவில்லை. நான் 30ந் தேதியிலும் திருக்கோவிலூரில் தான் இருந்தேன். உடலை எடுக்கும் போது சாட்சிகளை வரவழைத்து பிரேத விசாரணை செய்தார்களா என்று எனக்கு ஞாபகம் இல்லை. 30ந் தேதி நானும், கிராம உதவியாளர் மட்டும் போனோம். செருப்பு யாருடையது என்று எனக்கு சொல்லவில்லை. குற்றவாளியுடையதாக இருக்கலாம் என்ற கண்ணோட்டத்தின் பேரில் என்னை கூப்பிட்டார்கள். அந்த செருப்பு யாருடையது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் எதிரிகளை கைது செய்தார்களா இல்லையா என்று எனக்கு தெரியாது. என்னுடன் இன்னொரு கிராம நிர்வாக அலுவலர் இருந்தாரா என்றால் இல்லை. அந்த கிராமத்திற்கு நான் தான் கிராம நிர்வாக அலுவலர். நான் விடுப்பில் சென்றதால் அவர் கூடுதல் பொறுப்பு பார்த்தார். என் முன்பு தடையங்கள் இருந்ததாக பார்த்தார்களா என்று எனக்கு தெரியாது. என் முன்பு பார்த்தார்களா என்று ஞாபகம் இல்லை. வி.கே.சி பிரைடு செருப்பை நான் 27ந் தேதி பார்க்கவில்லை. 30ந் தேதி தான் பார்த்தேன். என்னிடம் செருப்பை வழக்கு தொடர்பாக கைப்பற்றியதாக சொன்னார்கள். நான் போட்டுள்ள கையெழுத்துக்கள் அனைத்தும் என்னை காவல் நிலையத்திற்கு வரவழைத்து பின்னிட்டு போடபட்டவை என்றும், நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கையெழுத்து போடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மேற்படி 2,5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையையே 3ம் எதிரி தமதாக ஏற்றுக்கொண்டார்கள்.

**<u>1,4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் எடைப்பாளையம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக இருந்த போது இந்த வழக்கை தவிர வேறு வழக்கில் சாட்சியாக இருந்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கு இல்லாமல் வேறு வழக்கிற்கு நான் சாட்சியாக இருந்துள்ளேன். அது நிலம் சம்மந்தப்பட்ட வழக்கு ஆகும். கிராம உதவியாளர் தனபால் எனக்கு தகவல்

கொடுத்தபோது அவர் கிராமத்தில் இருந்தார். எந்த கிராமம் என்றால் சித்தலிங்கமடம் கிராமம். நான் திருக்கோவிலூர் தாலுக்கா அலுவலகத்தில் இருந்தேன். தனபாலுக்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்று நான் கேட்டேனா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு போன போது அங்கு பொது மக்களும் இருந்தார்கள், போலீசாரும் இருந்தார்கள் என்றால் போலீசார் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு சென்ற பிறகு காவல் துறைக்கு தகவல் கொடுத்தேன். என் தகவலின் பேரில் காவல் துறையினர் அங்கு வந்தார்களா என்றால் இல்லை. போலீசார் ஏற்கனவே தகவல் தெரியும் என்றும் வழியில் இருப்பதாக என்னிடம் சொன்னார்கள். நான் காவல் நிலையத்திற்கு போன் செய்தேனா அல்லது காவலர்கள் யாருக்காவது போன் செய்தேனா என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் எந்த போலீஸ் அதிகாரியிடம் பேசினேன் என்று தெரியுமா என்றால் இல்லை. என்னை போலீசார் விசாரித்த போது நான் என்ன சொன்னேனோ அதை போலீசார் எழுதினார்கள் என்றால் சரிதான். மகசர் எழுதி கையெழுத்து பெற்றார்கள். நான் காவல் துறை விசாரணையில் சம்பவ இடத்திற்கு காவல் துறையினர் இரவு 8.45 மணிக்கு வந்தார்கள் என்று தற்போது தெரிவித்த விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். அதே போல் 30ந் தேதி காலை 8 மணிக்கு மீண்டும் எங்களை சம்பவ இடத்திற்கு அருகில் இருந்த கரும்பு தோட்டத்திற்கு வரவழைத்து வீட்டின் அருகே இருந்த வி.கே.சி.பிரைடு 10 இன்ச் கொண்ட ஒரு ஜோடி செருப்பை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றி மகசர் தயார் செய்ததாகவும் அதில் நாங்கள் கையெழுத்து செய்ததாகவும், நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரத்தை காவல் துறை விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் போன போது பொதுமக்களை சாட்சியாக இருக்கும்படி காவல் துறையினரும் கேட்கவில்லை நானும் கேட்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றிய செருப்பு ஈரமாக இருந்ததா அல்லது சேறும் சகதியுமாக இருந்ததா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அவர்கள் இதை கைப்பற்றியிருக்கிறோம் கையெழுத்து போடுங்கள் என்று சொன்னவுடன் நான் கையெழுத்து போட்டததால் தான் நான் ஞாபகம் இல்லை என கூறுகிறேன் என்றால் சரியல்ல. இரத்த கறை படிந்த சிமெண்ட் காரையை வீட்டின் உள்ளே படுக்கைக்கு பக்கத்தில் எடுத்தார்கள். நான் கையெழுத்து போட்ட கைப்பற்றுதல் மகசரில் இது படுக்கை அறையில்தான் எடுக்கப்பட்டது என எழுதப்பட்டிருந்ததா என்றால் எனக்கு தெரியவில்லை. பார்த்தால் தான் தெரியும். என்னிடம் காட்டப்படும் மகசரில் அப்படி எழுதப்படவில்லை. என்னை காவல்

நிலையத்திலும் கூப்பிட்டு அன்று விசாரித்தார்கள் என்றும், நான் காவல் நிலையம் போனேன் என்றும் சொன்னால் இல்லை. போலீசார் என்னை கையெழுத்து போடுங்கள் என்று சொன்னார்கள் என்றும், நான் கையெழுத்து போட்டேன் என்றும் எனக்கு அதனால்தான் என்ன செருப்பு என்ன விவரம் என்று தெரியவில்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**